### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

# பெரிய திருமொழி 1-3 - முற்ற மூத்து

### (திருவதரி)

968 * முற்ற மூத்துக் கோல் துணையா * முன்னடி நோக்கி வளைந்து *
இற்ற கால் போல் தள்ளி மெள்ள * இருந்து அங்கு இளையா முன் **
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி * பெரு முலையூடு * உயிரை
வற்ற வாங்கி உண்ட வாயான் * வதரி வணங்குதுமே 1

969 முதுகு பற்றிக் கைத்தலத்தால் * முன்னொரு கோல் ஊன்றி *
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று * மேற்கிளை கொண்டு இருமி **
இது என்னப்பர் மூத்தவாறென்று * இளையவர் ஏசா முன் *
மது உண் வண்டு பண்கள் பாடும் * வதரி வணங்குதுமே 2

970 உறிகள் போல் மெய்ந்நரம்பு எழுந்து * ஊன் தளர்ந்து உள்ளம் எள்கி *
நெறியை நோக்கிக் கண் சுழன்று * நின்று நடுங்கா முன் **
அறிதியாகில் நெஞ்சம்! அன்பாய் * ஆயிர நாமம் சொல்லி *
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் * வதரி வணங்குதுமே 3

971 பீளை சோரக் கண் இடுங்கிப் * பித்தெழ மூத்து இருமி *
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் * தள்ளி நடவா முன் **
காளையாகிக் கன்று மேய்த்துக் * குன்றெடுத்து அன்று நின்றான் *
வாளை பாயும் தண் தடம் சூழ் * வதரி வணங்குதுமே 4

972 பண்டு காமர் ஆனவாறும் * பாவையர் வாய் அமுதம்
உண்டவாறும் * வாழ்ந்தவாறும் * ஒக்க உரைத்து இருமி **
தண்டு காலா ஊன்றி ஊன்றித் * தள்ளி நடவா முன் *
வண்டு பாடும் தண்துழாயான் * வதரி வணங்குதுமே 5

973 எய்த்த சொல்லோடு ஈளை ஏங்கி * இருமி இளைத்து உடலம் *
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் * பேசி அயரா முன் **
அத்தன் எந்தை ஆதி மூர்த்தி * ஆழ்கடலைக் கடைந்த *
மைத்த சோதி எம்பெருமான் * வதரி வணங்குதுமே 6

974 பப்ப அப்பர் மூத்தவாறு * பாழ்ப்பது சீத் திரளை
ஒப்ப * ஐக்கள் போத உந்த * உன் தமர் காண்மின் என்று **
செப்பு நேர் மென்கொங்கை நல்லார் * தாம் சிரியாத முன்னம் *
வைப்பும் நங்கள் வாழ்வுமானான் * வதரி வணங்குதுமே 7

975 ஈசி போமின் ஈங்கு இரேன்மின் * இருமி இளைத்தீர் * உள்ளம்
கூசியிட்டீர் என்று பேசும் * குவளையங் கண்ணியர் பால் **
நாசமான பாசம் விட்டு * நல்நெறி நோக்கலுறில் *

வாசம் மல்கு தண்துழாயான் * வதரி வணங்குதுமே 8

976 புலங்கள் நைய மெய்யில் மூத்துப் * போந்திருந்து உள்ளம் எள்கி *
கலங்க ஐக்கள் போத உந்திக் * கண்ட பிதற்றா முன் **
அலங்கலாய தண்துழாய் கொண்டு * ஆயிர நாமம் சொல்லி *
வலங்கொள் தொண்டர் பாடி ஆடும் * வதரி வணங்குதுமே 9

977 * வண்டு தண் தேன் உண்டு வாழும் * வதரி நெடுமாலை *
கண்டல் வேலி மங்கை வேந்தன் * கலியன் ஒலி மாலை **
கொண்டு தொண்டர் பாடி ஆடக் * கூடிடில் நீள்விசும்பில் *
அண்டம் அல்லால் மற்று அவர்க்கு * ஓராட்சி அறியோமே 10

**அடிவரவு:** முற்ற முதுகு உறிகள் பீளை பண்டு எய்த்த பப்ப ஈசி புலன்கள் வண்டு ஏனம்